**முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்**

**A.S.No.07/2023**

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. 1 |
| பெயர் | .. மேகநாதன் |
| தகப்பனார் / கணவர் | .. ஆண்டி பிள்ளை |
| வயது | .. 63 |
| தொழில் | .. |
| கிராமம் | .. வடமணப்பாக்கம் |
| தாலுக்கா | .. செய்யாறு |

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04 ஆம் நாள் புதன்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை:**

கீழமை நீதிமன்றத்தில் தாவா சொத்தை சுவாதீனம் கேட்டு தான் தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். நான் நான்கு கிரையம் பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றும், ஆனால் நான்கு பத்திரத்தில் உள்ள சர்வே எண்கள் இவ்வழக்கிற்கு சம்பந்தமம் இல்லை என்றால் சரியல்ல, சம்பந்தம் உள்ளது. வழக்கு சொத்தின் சர்வே எண்.368, மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 98 செண்ட் ஆகும். நான் தாக்கல் செய்துள்ள நான்கு பத்திரங்களில் சர்வே எண்.368 வருகிறதா என்றால் வருகிறது. நான் சொல்வது போல் அவ்வாறு சர்வே எண். வரவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் நான் தாக்கல் செய்துள்ள கிரைய பத்திரங்களுக்கும் சம்பந்தம் இல்லை, 1ம் எதிர்மனுதாரர் வயதான என் சித்தப்பாவை காலம் தாழ்த்தவேண்டும் என்பதற்காக தாக்கல் செய்துள்ளேள் என்றால் சரியல்ல.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**